சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 30/2024

பெயர். திரு.தமிழ்ச்செல்வன் நாள். 15.04.2026
த/பெ. ராஜமாணிக்கம்

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி**

1. விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.1.** குற்ற இறுதி அறிக்கை **ம.த.சா.ஆ.2.** என்னுடைய விபத்து பதிவேடு நகல் **ம.த.சா.ஆ.3.** செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விடுவிப்புச் சான்றிதழ் நகல் **ம.த.சா.ஆ.4.** 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் வாகன ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ. 5** மற்றும் **ம.த.சா.ஆ.6**. என்னுடை ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ.7 மற்றும் 8.** செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வழங்கிய காய சான்றிதழ் நகல் **ம.த.சா.ஆ.9.** 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.10.** நான் ஓட்டி சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை நகல் **ம.த.சா.ஆ.11.** குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் நகல் **ம.த.சா.ஆ.12.** என்னுடைய ஓட்டுநர் உரிமம் நகல் **ம.த.சா.ஆ.13.** நான் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு சான்றிதழ் நகல் **ம.த.சா.ஆ.14.** என்னுடைய சம்பள சான்றிதழ் நகல் **ம.த.சா.ஆ.15.**

**1ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் தண்டரை கிராமத்திலிருந்து தொழுபேடு நோக்கி சென்று கொண்டிருந்தேன். நான் வியாபாரத்திற்கு செல்ல வேண்டுமென்றால் அயானார் கோவில் சந்திப்பில் சாலையை கடந்து செல்ல வேண்டும் என்றால் சரிதான். அங்கு

அடிக்கடி விபத்து ஏற்படும் என்பதால் தடுப்பான்கள் போடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். எனக்கு காலை 5.15 மணிக்கு விபத்து ஏற்பட்டது. அப்போது பொழுது விடியவில்லை. நான் கவனக்குறைவாக சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து என்னுடைய முழு அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் சொற்பக் காயங்கள் என்றாலும், மனுவிற்காக அதிகப்படுத்தி குறிப்பிட்டிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. **ம.த.சா.ஆ.11.** படி, என் மீது தான் தவறு என்று சொன்னால் சரியல்ல. **ம.த.சா.ஆ.11** ல் நான் ஓட்டி சென்ற வாகனத்தின் முன்புறம் சேதம் அடைந்ததாக குறிப்பிட்டிருந்தால் அது தவறு. நான் தான் பேருந்து வருவதை கவனக்காமல் பேருந்து பின்புறம் சென்று மோதிவிட்டேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.